Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MAY 13, 2025

செவ்வாய்க்கிழமை 13, மே 2025 | ஒளி: 10 கதிர்: 237 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## முள்ளிவாய்க்கால் கஞ்சி...

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து வடக்கு, கிழக்கு தமிழர் தாயகமெங்கும் மே 18ஆம் திகதி வரை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

இதன் முதல் நிகழ்வு வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இல்லத்திற்கு அருகில் உள்ள ஆலடி பகுதியில் திங்கட்கிழமை (12) இடம்பெற்றது.

- நிதர்ஷன் வினோத்



### கொழும்பு மாநகர சபையை கைப்பற்ற

## இரகசிய பேச்சு

கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக உறுப்பினர்களை வெல்வதற்காக தேசிய மக்கள் சக்தி கட்சியும் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளும் இரகசிய கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



### அரசியலமைப்பு சபையின்

## செயலாளர் பதவி விலகினார்

வெற்றிடமாக உள்ள அரசியலமைப்பு சபையின் செயலாளர் பதவிக்கு பொருத்தமானவரை நியமிக்க பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த செய்தித்தாள் விளம்பரங்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் என்று பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசியலமைப்பு சபையின் செயலாளர் பதவியை வகித்த முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க, தனிப்பட்ட காரணங்களுக்காக எதிர்வரும் 1ஆம் திகதி பதவி விலக உள்ளார்.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை அரசியலமைப்பு சபையில் சமர்ப்பித்துள்ளார். அதனை, அரசியலமைப்பு சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

தம்மிக்க தசநாயக்க பாராளுமன்றச் செயலாளர் நாயகம் பதவியிலிருந்து 2023 மே 25, அன்று ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்ற பிறகு, அதே ஆண்டில் அப்போதைய அரசாங்கத்தின் அரசியலமைப்புச் சபையின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.




### முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரத்தை

# அனுஷ்டிக்க அழைப்பு

■ பாறுக் ஷிஹான்

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரமானது மே 12ஆம் திகதி ஆரம்பமாகி மே மாதம் 18ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என தெரிவித்துள்ள. வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 8 மாவட்டங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளரும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவியான தம்பிராசா செல்வராணி, உணர்வுப்பூர்வமாக மேற்கொள்ள ஒன்றிணைய வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு பகுதியில், திங்கட்கிழமை (12) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்று முடிந்த போர் காரணமாக ஓர் இனம் அழிந்த ஒரு கதையாகவும் இரத்த ஆறு ஓடிய நாளாகவும் எங்கள் உறவுகள் இந்த மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை எங்கள் உறவுகள் குடும்பம் குடும்பமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட நாளாக அனுஷ்டிக்கும் ஒரு முக்கியமான நாளாகும்.

ஒரு இனவழிப்பு வாரம் வடக்கு, கிழக்கில் அனுஷ்டிக்கப்படவிருக்கின்ற இந்த வாரத்தில் 16 வருட காலமாக வலிகளைச் சுமந்து எங்கள் உறவுகளுக்கு நீதி கிடைக்காமல் இன்று வரை நாங்கள் வீதிகளில் கண்ணீருடன் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

எங்களுக்கு உரிய நீதி கிடைக்கும் வரை இந்த போராட்டத்தை சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்று நீதியைப் பெற முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். அது மட்டுமல்ல, உண்மையில் அந்த முள்ளிவாய்க்கால் பகுதியில் இலங்கை அரசு அங்கு போர் நடந்து கொண்டிருக்கும் போது பொருளாதாரத் தடையை விதித்து ஒரு உணவு கூட அப்பகுதிக்கு எடுத்துச் செல்ல முடியாத காலகட்டத்தில் அங்கு பட்டினி சாவு ஏற்பட்டது.


ஆனால், எமது உறவுகள் உப்பில்லாத அரிசிகளை உபயோகித்து நீரை ஊற்றி அங்குள்ள கர்ப்பிணி தாய்மார்கள் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காகக் கஞ்சி தயாரித்தது. அது தான் அந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியாகும். அன்று முள்ளிவாய்க்காலில் அக்கஞ்சிக்கு வரிசையில் நின்று கொண்டிருக்கும் வேளையில் எத்தனையோ செல் தாக்குதல்கள் விமானத் தாக்குதலுக்கு மத்தியிலும் கஞ்சி சிரட்டையுடன் உறவுகள் அவ்விடத்தில் மரணம் அடைந்தார்கள்.

இப்போது ஆட்சிக்கு வந்துள்ள அனுரகுமார அரசாங்கம், ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் தனக்கும் இவ்வாறான வலி தெரியும் என்றும் தனது தாயும் பிள்ளையைத் தொலைத்து விட்டு கண்ணீர் வடித்த காலமாகும் எனக் கூறி இன்று ஆட்சிக்கு வந்திருந்தார்.

ஆனால், இதுவரை காலமும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன செய்யலாம் என்ன செய்ய முடியும் என்ற தீர்மானம் எதையும் அவர் மேற்கொள்ளவில்லை. ஆனால், அன்று ஒரு நாள் பயங்கரவாத தடைச் சட்டத்தைத் தடை செய்வேன், அல்லது இல்லாமல் செய்வேன் என்று கூறியவர். இன்று அவர் ஆட்சியில் வந்தும் அதற்கான எந்த ஒரு ஏற்பாடுகளையும் செய்யவில்லை. இன்று அவர் நல்லாட்சி அரசாங்கம் என்று கூறிக்கொண்டு இங்கு உள்ள எமது இளைஞர்களையும் இங்குள்ள தமிழ் மக்களையும் நல்லாட்சி என்ற போர்வையில் இவ்வாறு சட்டங்களை வைத்து கைது செய்து கொண்டிருக்கிறார். ஆனால், இன்று இந்த அனுர அரசு பற்றியும் எமக்கு எவ்வாறான தீர்வுகளைத் தருவார்கள் என்றும் எமது இளைஞர்களுக்கு இதுவரை தெரியாது.

ஆனால், எங்களுக்கு அவர் குறித்து தெரியும். கடந்த காலங்களில் எத்தனை ஜனாதிபதிகளை நாங்கள் கடந்து வந்திருக்கிறோம். எத்தனை அரசாங்கங்களைக் கடந்து வந்திருக்கிறோம். ஆனால், எங்களுக்கு எந்த விதமான ஒரு பதிலும் கிடைக்கவில்லை. எமக்கு எந்தவிதமான ஒரு தீர்வும் கிடைக்கவில்லை. அதன் பிற்பாடு தான் நாங்கள் இன்று சர்வதேசத்தை நாடி இருக்கின்றோம். அது மட்டுமல்ல, மீண்டும் ஓ.எம்.பி.ஐ. எங்களிடம் முன் வைக்கிறார்கள்.

இந்த உள்ளக பொறிமுறை வேண்டாம் எனக் கூறியும் இவ்வாறு அவர்கள் செயல்படுகிறார்கள். நாங்கள் இன்று சர்வதேச பொறிமுறையை நாடி இருக்கின்றோம். ஆகவே, எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி முதல் மே 18ஆம் திகதி வரை உணர்வுப்பூர்வமாக இன அழிப்பு வாரத்தினை அனுஷ்டிக்க முடியும்.



## புதனன்று அறிக்கை

நுவரெலியா - கம்பளை பிரதான வீதியில் கொத்மலை, கெரண்டி எல்ல, பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (11) காலை 4.30 மணியளவில் இடம்பெற்ற பஸ் விபத்து தொடர்பில், புதன்கிழமை (14) நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். இந்த விபத்தில், 22 பேர் பலியானதுடன், 45 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




### 4 மணி நேர வேலை நிறுத்தத்தால்

## ரூ.300 மில்லியன் இழப்பு

கொழும்பு துறைமுகத்தின் ஜெயா கொள்கலன் முனையம் மற்றும் கிழக்கு கொள்கலன் முனையத்தில் ஞாயிற்றுக்கிழமை(11) இரவு ஊழியர்கள் முன்னெடுத்த நான்கு மணி நேர வேலைநிறுத்தத்தால் சுமார் 300 மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை துறைமுக அதிகார சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெசாக் போயா விடுமுறை நாட்களுடன் இணைந்த ஏப்ரல் 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகையை குறைக்க துறைமுக அதிகாரசபை எடுத்த முடிவினாலேயே குறித்த வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

முந்தைய முறையின்படி மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று இலங்கை துறைமுக அதிகார சபை நிர்வாகம் மீண்டும் கடிதம் வெளியிட்டதைத் தொடர்ந்து, திங்கட்கிழமை (12) அதிகாலை 12.30 மணியளவில் தொழிலாளர்கள் மீண்டும் பணிகளைத் தொடங்கினர்.

தொடர்ச்சி P2


## "மின்கட்டண அதிகரிப்பு முயற்சியை கைவிடுக"



மின்சார கட்டணத்தில் மீண்டும் சுமார் முப்பது சதவீதத்தால் அதிகரிக்கும் முயற்சிகளை உடனடியாக நிறுத்துமாறு முன்னணி சோசலிசக் கட்சியின் செயலாளர் குமார் குணரட்னம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறார். சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைக்கு இணங்க, மின்சாரக் கட்டணம் 30 சதவீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை

தொடர்ச்சி P2

## கம்பளையில் ரூ.22 கோடி கொள்ளை: மூவர் கைது



கம்பளை - வெலம்பொட பிரதேசத்தில் கோடீஸ்வரரான வர்த்தகரிடம் 22 கோடி ரூபாயை கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவரை, கண்டி குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இந்த கொள்ளை சம்பவம், வர்த்தகரின் வீட்டுக்குள் வைத்து, வியாழக்கிழமை(8) அன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர்கள் இந்த தொழிலதிபருக்கு இருபத்தி நான்கு காரட் தங்க பிஸ்கெட்டை கொடுத்து அதன் தரத்தைச் சரிபார்க்க அறிவுறுத்தியுள்ளனர். அதன்படி, தொழிலதிபர் அதை ஆய்வு செய்தபோது, அது உண்மையான இருபத்தி நான்கு கேரட் தங்கம் என்பது தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

## "எம்முடன் இணைபவர்களுக்கு பணம், சலுகைகள் இல்லை"



கொழும்பு மாநகர சபை உட்பட தேசிய மக்கள் சக்தி, முன்னிலை வகிக்கும் உள்ளூ ராட்சி மன்றங்களின் அதிகாரத்தை நிறுவுவோம் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மற்ற கட்சிகள் மற்றும் சுயேச்சை உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிறுவுவதற்குத் தேசிய மக்கள் சக்தி கட்சி பணம் அல்லது சலுகைகளை வழங்காது என்றார்.

தொடர்ச்சி P2

### இந்தியா – பாகிஸ்தான் போர் நிறுத்தம்

## வரவேற்றார் ஜனாதிபதி



இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போர் நிறுத்த உடன்பாட்டை வரவேற்பதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானமானது இரு தரப்பிலும் அப்பாவி உயிர்களைக் காப்பாற்றுவதற்கான ஒரு முக்கியமான ஒப்பந்தம் மட்டுமல்லாது, நிலையான அமைதி, பிராந்திய ஸ்திரத்தன்மையை அடைவதற்கான முதல் மற்றும் முக்கிய முன்னெடுப்பு எனவும் ஜனாதிபதி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பெரிய பேரழிவு ஏற்படுவதற்கு முன்பு, இந்தியா மற்றும் பாகிஸ்தான் தலைவர்கள் நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் தோட்டாக்களுக்கு பதிலாக வார்த்தைகளைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானித்திருப்பது தங்கள் அறிவு ஞானத்தையும் இராஜதந்திரத் திறமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 4 மணி நேர வேலை நிறுத்தத்தால் ரூ.300 மில்லியன் இழப்பு

வேலை நிறுத்தம் தொடங்கிய நேரத்தில், பாதிக்கப்பட்ட முனையங்களில் ஆறு சரக்குக் கப்பல்கள் நங்கூரமிட்டிருந்தன, மேலும் அனைத்து நடவடிக்கைகளும் முற்றிலுமாக நிறுத்தப்பட்டதாக அந்த அதிகாரி கூறினார்.

ஏப்ரல் 12ஆம் திகதி போயா தினத்தன்று செய்யப்படும் வேலைக்கான கூடுதல் நேரக் கொடுப்பனவுகளை ரூ.100 ஆகக் கட்டுப்படுத்த இலங்கை துறைமுக அதிகாரசபையின் மூத்த அதிகாரி ஒருவர் எடுத்த முடிவிலிருந்து இந்த சர்ச்சை எழுந்துள்ளது.

தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாக ஊடக அறிக்கைகளை வெளியிட்டதற்காக முன்னர் விமர்சிக்கப்பட்ட ஒரு மூத்த நிர்வாகியால் இந்த முடிவுகள் ஒருதலைப்பட்சமாக எடுக்கப்பட்டதாக துறைமுக அதிகாரசபை அதிகாரி மேலும் குற்றம் சாட்டினார்.

துறைமுக செயல்பாடுகளில் தற்காலிக நிறுத்தம், நிர்வாகம் தொழிலாளர் உறவுகளைக் கையாளும் விதம் மற்றும் தேசியப் பொருளாதாரத்தில் இத்தகைய இடையூறுகளின் பரந்த நிதி தாக்கம் குறித்து புதிய கவலைகளைத் தூண்டியுள்ளது.

# இரகசிய பேச்சு

ஆட்சியை கைப்பற்றுவதற்கு ஆதரித்தால், பல்வேறு பதவிகள், சலுகைகளை வழங்குவதாக ஒவ்வொரு அரசியல் கட்சியும் உறுதியளித்து வருவதாகவும் அறியப்படுகிறது.

இது குறித்து நாம் வினவியபோது, கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை ஐக்கிய மக்கள் சக்தி நிறுவும் என்று கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையில் ஆகக் கூடுதலான பெரும்பான்மை உறுப்பினர்களை தங்கள் கட்சியை வென்றுள்ளதால், அந்த ஆட்சி அதிகாரத்தை நிறுவுவதற்கு அரசாங்கத்திற்கு முழு உரிமை உள்ளது என்று தேசிய மக்கள் சக்தி கூறுகிறது.

இதற்கிடையில், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்பட ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் ஒருவர் தயக்கம் காட்டுவதால், கொழும்பு மாநகர சபையில் எதிர்க்கட்சிகள் அதிகாரத்தை அமைப்பதில் தடையாக உள்ள ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஆட்சியை அமைத்தால், அவர்களின் பயணம் வெற்றிகரமாக அமைந்தால், வரவிருக்கும் முக்கிய தேர்தல்களிலும் அத்தகைய சமரசத்திற்கான கோரிக்கைகள் விடுக்கப்படலாம், எனவே அதை ஆரம்பத்திலேயே தடுக்க வேண்டும் என்று சில தலைவர்கள் கருதுவதாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

இந்த சூழ்நிலையில், கொழும்பு மாநகர சபையில் எதிர்க்கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் அபாயம் இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி 48 உறுப்பினர்களை வென்றது.

கொழும்பு மாநகர சபையில் உறுப்பினர் எண்ணிக்கையின் அடிப்படையில் எதிர்க்கட்சியே அதிகாரத்தை நிலைநாட்ட அதிக ஆற்றலைக் கொண்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இதற்கிடையில், ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பிற கட்சிகளுடன் இணைந்து கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தை நிலைநாட்ட ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்த நாட்டிலுள்ள நகராட்சி மன்றங்களில், சிறப்பு கவனத்தை ஈர்த்தது கொழும்பு மாநகர சபையாகும். கொழும்பு நகரின் பெரும்பாலான விவகாரங்களைக் கட்டுப்படுத்தும் கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தைப் பெறுவது ஒரு பெரிய அரசியல் சக்தியாக இருப்பதால், பல அரசியல் கட்சிகள் சிறிது காலமாக அங்கு அதிகாரத்தைப் பெற ஆர்வமாக உள்ளன.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாநகர சபையின் பெறுபேறுகளின் பிரகாரம்,

தேசிய மக்கள் சக்தி (NPP) - 81,814 (48 ஆசனங்கள்)
சமகி ஜன பலவேகய (SJB) - 58,375 (29 ஆசனங்கள்)
ஐக்கிய தேசியக் கட்சி (UNP) - 26,297 (13 ஆசனங்கள்)
இலங்கை பொதுஜன பெரமுன (SLPP) - 9,341 (5 ஆசனங்கள்)
இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) - 8,630 (4 ஆசனங்கள்)
சுயேச்சைக் குழு 03 - 5,934 (3 ஆசனங்கள்)
சுயேச்சைக் குழு 05 - 4,659 (2 ஆசனங்கள்)
ஐக்கிய அமைதிக் கூட்டணி - 4,473 (2 ஆசனங்கள்)
சர்வஜன பலய' (SB) - 3,911 (2 ஆசனங்கள்)
சுயேச்சைக் குழு 04 - 3,640 (2 ஆசனங்கள்)
மக்கள் கூட்டணி - 2,754 (1 ஆசனம்)
தேசிய சுதந்திர முன்னணி - 2,398 (1 ஆசனம்)
ஐக்கிய குடியரசு முன்னணி - 2,157 (1 ஆசனம்)
சுயேச்சை குழு 01 - 1,909 (1 ஆசனம்)
சுயேச்சை குழு 02 - 1,791 (1 ஆசனம்)
ஜனநாயக தேசிய கூட்டணி - 1,370 (1 ஆசனம்)
தேசிய மக்கள் கட்சி - 950 (1 ஆசனம்)

பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது,

# வரவேற்றார் ஜனாதிபதி

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் நெருங்கிய அண்டை நாடாகவும், நண்பராகவும், நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு அமைதியான தீர்வு காண்பதற்கான ஒரு முக்கிய படியாக இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் இருக்கும் என இலங்கை நம்புகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான கலந்துரையாடலுக்கு எமது ஆதரவை வழங்குவதோடு எமது காலப்பகுதியிலேயே பிராந்திய அமைதியை அடைவதற்குத் தேவையான எந்தவொரு பங்களிப்பையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க உறுதியளித்துள்ளார்.

# "மின்கட்டண அதிகரிப்பு முயற்சியை கைவிடுக"

எடுத்து வருகின்றது என்றும் குமார் குணரட்னம் குறிப்பிட்டார்.

மக்கள் கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்து வரும் நேரத்தில் மீண்டும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டால், அவர்கள் நடமாட வழியின்றி தவிக்க நேரிடும் என்றும் குமார் குணரத்னம் கூறினார்.

# கம்பளையில் ரூ.22 கோடி கொள்ளை: மூவர் கைது

பின்னர் சந்தேக நபர்கள் தங்களிடம் இதுபோன்ற 15 கிலோ கிராம் தங்க பிஸ்கெட்டுகள் இருப்பதாகவும், அவற்றுக்கு 220 மில்லியன் ரூபாய் (22 கோடி) தேவைப்படுவதாகவும் தொழிலதிபரிடம் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, தொழிலதிபர் தனது மில்லியன் கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஜீப்பையும், வீட்டில் தனது மனைவி மற்றும் குழந்தைகளின் நகைகளையும் அடமானம் வைத்து, மற்ற நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து இருபத்தி இரண்டு மில்லியன் ரூபாய்களை கடன் வாங்கியுள்ளார்.

பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபடி, 8ஆம் திகதி, 8 நபர்கள் ஒரு வேனில் வந்து, தொழிலதிபரின் வீட்டில் உள்ள மற்ற உறுப்பினர்களைக் கவனமாக வேறொரு வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டு, தொழிலதிபரிடம் இருந்து பணத்தைத் திருடிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த கண்டி குற்ற விசாரணைப் பிரிவினர், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# "எம்முடன் இணைபவர்களுக்கு பணம், சலுகைகள் இல்லை"

யக்கல நகரில், கட்சி ஆர்வலர் ஒருவரால் நன்கொடையாக வழங்கப்பட்ட நிலத்தில் கட்டப்பட்ட தேசிய மக்கள் கட்சியின் கம்பஹா மாவட்ட அலுவலகத்தை ஞாயிற்றுக்கிழமை (11) திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் விஜித ஹேரத் மேலும் தனது கருத்துக்களைத் தெரிவித்து, "தேசிய மக்கள் சக்தி இயக்கத்திற்காக எங்கள் சொந்த இடத்தில், எங்கள் சொந்த வீட்டில் ஒரு மக்கள் தொடர்பு அலுவலகத்தை நிறுவவும், இந்த அலுவலகத்தை மிகுந்த வெற்றியுடன் தொடங்கவும் முடிந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இவ்வளவு மதிப்புமிக்க நிலத்தை அர்ப்பணித்ததற்காகத் தோழர் ரஞ்சித்துக்கு நன்றி கூறுகிறேன்" என்றார்.

நாட்டில் மில்லியன் கணக்கான மக்களின் மரியாதையையும் அன்பையும் அனுபவிக்கும் அறுபது ஆண்டுகால பழமையான மக்கள் விடுதலை முன்னணிக்கு நாட்டில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சக்தியைப் பெற இரத்தமும் கண்ணீரும் தேவைப்பட்டது, குடும்ப உறுப்பினர்களை இழந்தாலும் கூட. நாட்டின் அதிகாரப் போட்டியில் மூன்று தேர்தல்களிலும் எங்களுக்கு மகத்தான வெற்றியைத் தந்த கம்பஹா மாவட்ட மக்களுக்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சிறப்பு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களைப் போல, தேர்தல்களின் போது வன்முறையில் ஈடுபடாமலும், அரசு சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தாமலும் ஜனநாயக ரீதியாகச் செயல்படுவதன் மூலமும், அரசு அதிகாரம் இருப்பதாகக் கூறுவதன் மூலமும், நாட்டிற்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகவும், புதிய அரசியல் கலாச்சாரமாகவும் காட்டப்பட்டுள்ளது என்றார்.

இந்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில், நாங்கள் எதிர்க்கட்சியை விட முன்னணியில் இருக்கிறோம், ஆனால் எதிர்க்கட்சிகளிடம் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இருப்பதால், வேறு பல கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் ஒன்றிணைத்து அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறோம். இருப்பினும், அந்தக் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பல உறுப்பினர்கள் கிராமத்தில் அதிகாரத்தை நிலைநாட்டத் தேசிய மக்கள் சக்தி இயக்கத்துடன் இணைந்து செயல்படத் தயாராகி வருகின்றனர். அவர்களை ஒன்றிணைப்பதன் மூலம், எங்கள் கட்சி வெற்றி பெற்ற உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிலைநாட்டுவோம் என்றார்.

நாங்கள் வெற்றி பெற்ற கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தை நிலைநாட்ட அவர்கள் எங்களுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதால், கொழும்பிலும் நாங்கள் அதிகாரத்தை நிலைநாட்டுவோம். கிராமத்திற்கும் நகரத்திற்கும் வேலை செய்யக் கட்சியுடன் இணைந்து செயல்பட நாங்கள் தயாராக இருக்கிறோம். மக்கள் எங்களுக்கு அளித்த அதிகாரத்திற்கு நாங்கள் நியாயம் செய்கிறோம் என்றார். மற்ற கட்சிகளைப் போல, மற்ற கட்சிகளின் உறுப்பினர்களுக்குப் பணமோ சலுகைகளோ வழங்க மாட்டோம் . எங்களைப் பலப்படுத்துபவர்களுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்றார்.

# கள்ளக்காதலி தாக்கியதில் ஒருவர் மரணம்

கள்ளக்காதலி தாக்கியதில் நபர் ஒருவர் மரணமடைந்த சம்பவமொன்று பேருவளை, வலத்தர பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (11) அன்று ஏற்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஏற்பட்ட தகராறில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர், இரவு உயிரிழந்துள்ளார்.

அந்த வீட்டில் இருந்த இருவருக்கும் ஞாயிற்றுக்கிழமை(11) இரவு வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்த ஒருவர் விழுந்துவிட்டதாக பேருவளை பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் கிடைத்துள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார், காயமடைந்த நபரை உடனடியாக பேருவளை மருத்துவமனையில் அனுமதித்தனர். எனினும், அவர் மரணமடைந்துவிட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணையில், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதை அடுத்தே, அந்த நபரின் கள்ளக்காதலி தாக்கியதில், அந்த நபர் உயிரிழந்துள்ளார் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் வலத்தர, பேருவளை பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர் என்றும், 42 வயதுடைய பெண் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானில்

# 'செஸ்' தடை



ஆப்கானிஸ்தானில், சதுரங்கம் (செஸ்) விளையாடுவதற்கும் அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும், தாலிபான் அரசு காலவரையற்ற தடை விதித்துள்ளது.

இது குறித்து விளையாட்டு இயக்குநரக செய்தித் தொடர்பாளர் அடல் மஷ்வானி கூறுகையில்,

"இஸ்லாமிய ஷரியாவின் கீழ் சதுரங்கம் சூதாட்டத்தின் ஒரு வடிவமாகக் கருதப்படுகிறது.

இது நாட்டின் நன்மையை ஊக்குவித்தல் மற்றும் தீமையைத் தடுப்பதற்கான சட்டத்தின்- படி தடைசெய்யப்பட்டுள்ளது. சதுரங்கத்திற்கு மத ரீதியான ஆட்சேபனைகள் உள்ளன.

இந்த ஆட்சேபனைகள் தீர்க்கப்படும் வரை, ஆப்கானிஸ்தானில் இந்த விளையாட்டு நிறுத்தி வைக்கப்படும்- என்று கூறினார்.

இந்த முடிவு சதுரங்க ஆர்வலர்கள் மற்றும் தொடர்புடைய வணிகங்கள் மத்தியில் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

முன்னதாக பெண்கள் விளையாட்டுகளில் பங்கேற்கத் தாலிபான் அரசு தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

# "மு.காவை துரத்த ஆரம்பித்து விட்டனர்"

நூருல் ஹுதா உமர்




பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, நிந்தவூர், இறக்காமம், மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு, நாவிதன்வெளி போன்ற இடங்களில் இருந்து மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வெளியேற்றியிருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக கல்முனை தொகுதியில் இருந்தும் எதிர்காலத்தில் படுதோல்வியுடன் மு.கா வெளியேறும் என்று ஐக்கிய மக்கள் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஏ.சி. எஹியா கான் தெரிவித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 93 உயர் பீட உறுப்பினர்களும் ஒன்றிணைந்து கல்முனைக்கு வந்தாலும் ஹரீஸின் அரசியல் முன்னெடுப்புக்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் தோல்வியுடன் வெளியேறிச் செல்வார்கள் என்றார்.

ஐக்கிய மக்கள் காங்கிரஸ் காரியாலயத்தில் திங்கட்கிழமை(12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரபின் மரணத்தின் பின்னர் படிப்படியாக அழிந்து, இப்போது ஹக்கீம் காங்கிரஸாக மாறியிருக்கிறது. இதனால் ஹக்கீம் காங்கிரசுக்கு இம்முறை முஸ்லிம் வாக்காளர்கள் நல்ல பாடம் படிப்பித்திருக்கிறார்கள். ஒரு சிலரின் தனியார் நிறுவனம் போன்று இயங்கும் இவர்களின் ஆணவத்தை முஸ்லிம் மக்கள் நிராகரித்து ஹக்கீமின் தலைமைத்துவத்தைத் தோற்கடித்திருக்கிறார்கள். அவருக்கு மாற்றீடான தலைமைத்துவமாக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வை மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

வாயிருப்பவர்களிடம் வாக்கு இல்லை. வாக்கு இருப்பவர்களிடம் வாயில்லை. எனும் நிலையில் ஹக்கீமின் பின்னால் இருப்பவர்கள் வாயை மட்டும் வைத்துக்கொண்டு இருப்பவர்கள். வாக்கில்லாதவர்களே என்பதை மக்கள் இம்முறை நிரூபித்துள்ளார்கள். தலைவரின் சூழ்ச்சியால் கட்சிக்குள் பிரமுகர்களிடையே பிரச்சினையை உருவாக்கி அதில் அவர் குளிர்காய்ந்து கொள்கிறார். அக்கரைப்பற்று மக்கள் அதாஉல்லாவின் பக்கம் ஒன்றிணைந்தது போல, முஷாரஃபின் பின்னால் பொத்துவில் மக்கள் ஒன்றிணைந்தது போல, மாஹிருடன் சம்மாந்துறை மக்கள் ஒன்றிணைந்தது போல, கல்முனை தொகுதி மக்கள் ஹரீஸுடன் இருக்கிறார்கள் என்பதை ஒரு தேர்தல் வந்தால் எல்லோரும் தெரிந்து கொள்வார்கள்.

முஸ்லிம் சமூகத்தின் சாபக்கேடான ஹக்கீம் காங்கிரஸைத் தோற்கடிக்க சகோதரர் ஹரீஸின் அணியில் இணைந்து பயணிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். கல்முனை தொகுதியில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபையிலும், மாகாண சபையிலும் நாங்கள் ஹக்கீம் காங்கிரஸைத் துரத்தி மக்களுக்கு விமோசனத்தைப் பெற்றுக்கொடுப்போம். கல்முனையையும்-சாய்ந்தமருதையும் கசப்புணர்வுடன் மாற்றியமைக்க ஹக்கீம் காங்கிரஸ் செய்த சதிகளை நாங்கள் அறிவோம். பொத்துவில் மக்கள் மு.காவை வெறுத்து முஷரப்புடன் கைகோர்த்துள்ளார்கள். பொத்துவிலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து முஷாரப் ஆட்சியமைப்பாராயின் அடுத்த முறை அவர் ஒரு வட்டாரத்தையும் வெல்ல மாட்டார்.

விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் தேசிய மக்கள் சக்தி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அதிகாரத்தில் இருக்கும். அவர்களைப் பலப்படுத்தி சமூகத் தேவைகளை அடைந்து கொள்வதே புத்திசாலித்தனம். அதை விடுத்து ஹக்கீம் காங்கிரஸின் பின்னால் சென்று நாம் நஷ்டமடைய முடியாது என்றார்.







மட்டக்களப்பு

# 388 கைதிகளுக்கு பொது மன்னிப்பு


நாடு பூராகவும் சிறைச்சாலைகளில் உள்ள 388 கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் , வெசாக் தினமான திங்கட்கிழமை (12) விடுதலை செய்யப்பட்டுள்ளனர் .

சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் சிறைச்சாலையிலிருந்து 20 கைதிகள், மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து ஒரு பெண் கைதி உட்பட 16 கைதிகள், வவுனியா சிறைச்சாலையில் இருந்து 7 கைதிகள் விடுவிக்கப்பட்டனர் .

- தமிழ்மிரர் நிருபர்கள்





யாழ்ப்பாணம்






வவுனியா

தமிழ் பேசும் கட்சிகளோடு

# "பேசி வருகிறோம்"

ஹஸ்பர் ஏ.எச்.

பல சபைகளில் தலைமைப் பொறுப்பை ஏற்கவும் முதலில் தமிழ் பேசும் கட்சிகளுடன் கட்சியின் தலைமைத்துவம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கிண்ணியா பெரியாற்று முனை நகர சபைக்கு சொந்தமான கட்டிடத்தில் திங்கட்கிழமை(12) இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் மற்றும் வெற்றியீட்டியவர்களுடனான- சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.



குறித்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான அஷ்ரப் தாஹிர், முத்து முஹம்மது மற்றும் கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

சில சபைகளில் பிரதி தவிசாளர்களை பெறுவதற்கும் சில சபைகளில் ஆட்சியின் பங்காளர்களாக இருப்பதற்கும் செயல்பட்டு வருகிறோம். குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய மாவட்டங்களிலும் வாக்களித்த மக்களுக்கு எமது கட்சி சார்பாக நன்றியை- தெரிவித்துக் கொள்வதுடன் அதேபோல் கட்சியினுடைய வேட்பாளர்கள் அரும்பாடுபட்டு தங்களுக்காகவும் கட்சிக்காகவும் ஒன்று பட்டு வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறேன் .

அதிக பட்ச ஆதரவுகள் கிடைக்கப்பெற்றுள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவாக இருக்கலாம் இதில் ஆட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்கவும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் நல்ல சபைகளை உருவாக்கி அதன் மூலம் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் உச்ச பயனைப் பெற்றுக் கொடுப்போம் என்றார்.

எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்திற்கான மாவட்ட தலைமைத்துவம் மற்றும் மத்தியக் குழு உள்ளிட்டவற்றை உயர் பீட ஒன்று கூடலின் பின் முடிவுகளை எடுப்போம். இம்முறை திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நல்லதொரு முடிவுகளைப் பெற்று மாற்றம் கண்டுள்ளது. இதற்காகக் கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உள்ளிட்டவர்கள் உழைத்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறேன் என்றார்.

## பீடி இலைகளுடன் நால்வர் கைது

புத்தளம் முகத்துவாரம் கடல் பகுதியில் சனிக்கிழமை (10) அன்று சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வர முற்பட்ட பீடி இலைகளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடல் வழிகள் ஊடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு ஆட்கடத்தல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, கடற்படையினர், நாட்டைச் சுற்றியுள்ள கடற்கரை மற்றும் கடற்கரை உள்ளடக்கி வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர்.

அதன்படி, சனிக்கிழமை (10) அன்று புத்தளம், முகத்துவாரம் கடல் பகுதியில் நடத்தப்பட்ட இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, அந்தக் கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான இரண்டு டிங்கி படகுகளைச் சோதனைக்கு உட்படுத்திய போது 14 பைகளில் பொதி செய்யப்பட்ட சுமார் 497 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.



இந்த நடவடிக்கையின் மூலம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 28 - 41 வயதுக்குட்பட்ட கற்பிட்டி, ஆனவாசலை மற்றும் மான்பூரி பிரதேசங்களில் வசிப்பவர்கள் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களுடன், பீடி இலைகள் மற்றும் டிங்கி படகு ஆகியவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் -மதுவரி விசேட பிரிவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## தீ பரவலில் வர்த்தக நிலையத்திற்கு சேதம்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, காத்தான்குடியில் வர்த்தக நிலையமொன்றில் ஞாயிற்றுக்கிழமை (11) இரவு ஏற்பட்ட தீ பரவலினால் குறித்த வர்த்தக நிலையத்தின் உட்பகுதி எரிந்து சேதமடைந்துள்ளது. புதிய காத்தான்குடி பௌஸி மாவத்தை (ரெலிகொம்) வீதியிலுள்ள வர்த்தக நிலையத்தின் மீதே இந்த தீப் பரவல் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, காத்தான்குடி நகர சபை தீ அணைக்கும் இயந்திரம் மட்டக்களப்பு மாநகர சபையின் தீ அணைக்கும் இயந்திரம் வரவழைக்கப்பட்டு பொது மக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது

பிரபல வர்த்தகரான நசீலா அக்பர் ஹாஜியாருக்கு சொந்தமான இந்த வர்த்தக நிலையத்திற்கு தீ பரவலில் 50 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது

தீப் பரவலுக்கான காரணங்கள் குறித்து காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






## மே 18ஆம் திகதி வரை முள்ளிவாய்க்கால் கஞ்சி

நிதர்ஷன் வினோத்

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து திங்கட்கிழமை(12) முதல் எதிர்வரும் மே 18ம் திகதி வரை வடக்கு கிழக்கு தமிழர் தாயகமெங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

இதன் முதல் நிகழ்வு வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இல்லத்திற்கு அருகில் உள்ள ஆலடி பகுதியில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவர்களால் அப்பகுதி மக்களிடம் அரிசி சேகரிக்கப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு சிரட்டைகளில் பொதுமக்களுக்கும் வீதியில் சென்றவர்களுக்கும் வழங்கப்பட்டது.





முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வார காலப்பகுதியை துக்க தினமாகத் தமிழ் மக்கள் அனுஷ்டிக்க வேண்டும். கேளிக்கை ரீதியான நிகழ்வுகளையோ, நினைவுகூரலை அவமதிக்கும் வகையான செயற்பாடுகள் இந்த காலப்பகுதியில் தமிழ் மக்கள் தவித்துக் கொள்ள வேண்டும் என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இதன்போது கோரிக்கை விடுத்தது.

## மீனவர்களின் வலையில் சிக்கிய திருக்கை மீன்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி-ஏத்துக்கால் கடலில் ஞாயிற்றுக்கிழமை(11) மாலை திருக்கை மீன் ஒன்று சிக்கியுள்ளது.

சம்பவத்தன்று மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களின் வலையிலேயே சுமார் 300 கிலோ எடை கொண்ட இந்த திருக்கை மீன் பிடிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்த மீனைக் கரைக்குக் கொண்டு வந்து பின்னர் அவை விற்பனை செய்ததாக மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## ஹக்கீம்மை சந்தித்தார் பாக். உயர் ஸ்தானிகர்

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் (ஓய்வுபெற்ற) மேஜர் ஜெனரல் பஹீம் உல் அஸீஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்மை அவரது இல்லத்தில் வைத்துக் கடந்த வாரம் சந்தித்து உரையாடியுள்ளார்.

இதில், கட்சியின் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





சிவனொளிபாதமலை

## பருவகாலம் நிறைவு

ரஞ்சித் ராஜபக்ஷ

வெசாக் தினமான திங்கட்கிழமை(12), இரவு சிவனொளிபாத மலை மேல் தளத்தில் பல விசேட நிகழ்வுகள் நடைபெற்று, 2024/2025 சிவனொளிபாத மலை யாத்திரை பருவகாலம் நிறைவடைந்தது.

## சுற்றுலா சென்றவர் நீரில் மூழ்கி மரணம்

பொலன்னறுவை கிரித்தலே பகுதிக்கு சுற்றுலா சென்று- கிரித்தலே வாவியில் குளிக்கச் சென்ற குழுவில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக மின்னேரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வல்கம, பாய தந்துரை பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய எம்.ஜி.பிரேமதிலக்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் .

குறித்த நபர் கிரிதலே வாவியில் மூழ்கிக் கொண்டிருந்தபோது உயிர்காப்பாளர்களால் அந்த நபர் மீட்கப்பட்டு, வேனில் பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ‘வீதி ஒழுக்கத்திற்கு’ உடனடி நடவடிக்கை அவசியம்

கதிர்காமத்தில் இருந்து குருநாகலை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ், நுவரெலியா - கம்பளை பிரதான வீதியில் கொத்மலை, கெரண்டி எல்ல, பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (11) அதிகாலை 4.30 மணியளவில், பள்ளத்தில் விழுந்து விபத்துக்கு உள்ளானதில், ஆண்கள் 16 பேரும் பெண்கள் அறுவருமாக 22 பேர் மரணித்துள்ளனர். இந்த சம்பவம் முழு நாட்டையும் சோகத்தில் ஆழ்த்தியிருந்தது.

இந்த சம்பவத்தைத் தவிர்த்து, கடந்த 05 ஆண்டுகளில் நாட்டில் 12,140 பேர் வீதி விபத்துகளில் இறந்துள்ளனர். அக்காலப்பகுதியில், 117,970 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. 11,581 உயிரிழப்பு விபத்துகள் நிகழ்ந்துள்ளதாகவும், இவற்றில் பெரும்பாலானவை பேருந்து விபத்துகள் என்றும் பொலிஸ் தரப்பு கூறுகிறது.

வீதி விபத்துகளைப் பின்னோக்கிப் பார்த்தால், நம் நாட்டில் பொறுப்பற்ற ஓட்டுநர்களும் வீதிகள் ஒழுக்கமின்மையும்தான் இந்த துயரங்கள் அனைத்திற்கும் காரணம் என்பது தெளிவாகிறது. பயணிகள் பேருந்து சேவை, குறிப்பாக, தனியார் பேருந்துகள், முழுமையான குழப்பமாக மாறிவிட்டது, மேலும் பேருந்து சேவை இப்போது கிட்டத்தட்ட முழுமையாகப் பயிற்சி பெறாத மற்றும் ஒழுக்கமற்ற குழுவின் பிடியில் இருப்பதைக் காண்கிறோம்.

பேருந்து சேவை தேசியமயமாக்கப்பட்டதில் இருந்து, அல்லது அதற்கு முன்பே கூட, பேருந்து சேவை நம்பமுடியாத அளவுக்கு ஒழுக்கமான மற்றும் பயிற்சி பெற்ற பேருந்து தொழிலாளர்கள் குழுவின் கைகளில் இருந்து வருகிறது. ஆனால், தனியார் பேருந்துகளின் வருகையும், இந்தப் பேருந்துகளின் உரிமையாளர்கள் அரசாங்கத்திற்கு உகந்த அடியாட்களாக மாறியதும், பேருந்து சேவையின் “தரம்” குறையத் தொடங்கியது.

அரசுப் பேருந்து சேவையாக இருந்தாலும் சரி, தனியார் பேருந்து சேவையாக இருந்தாலும் சரி, மற்ற வாகன ஓட்டிகளும், பாதசாரிகளும் பேருந்தைக் கண்டாலே பயப்படும் அளவிற்கு, கொடிய, கொடிய சேவையாக மாறிவிட்டது. எனவே, இலங்கையில் பயணிகள் பேருந்து சேவையை உடனடியாக ஒழுங்குபடுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மேற்கண்ட விபத்துத் தரவுகள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

உண்மையில், வீதி விபத்துக்கள் நிகழ்வதும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் இந்த நாட்டிற்கு ஒரு பெரிய சோகம். பேருந்துகளாக, மூன்று சக்கர வாகனங்களாக, மணல் லொறிகளாக, மோட்டார் சைக்கிள்களாக எதுவாக இருந்தாலும் சரி, நாய்கள், பூனைகளைப் போலவே, எல்லா வகையான விபத்துகளில் மக்கள் வீதிகளில் இறந்து கொண்டிருக்கிறார்கள்.

‘அரை மனதுடன்’ ஓட்டுநர்களின் பாதுகாப்பற்ற வாகனம் ஓட்டுதல் வீதிகளில் ஏற்படும் இந்த விபத்துகளுக்கும் இறப்புகளுக்கும் காரணமாகும். ‘வீதி ஒழுக்கத்திற்கு’ உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நாட்டின் குடிமக்கள் எதிர்பார்க்கிறார்கள். கடந்த காலங்களில் பாதசாரி கடவையில் கூட, வீதி விபத்துக்களால் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலைமை இனி இந்த நாட்டில் ஏற்படக்கூடாது என்று நாங்கள் நம்புகிறோம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
## எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, பிறப்பு எடுக்கும் எல்லா ஜீவன்களுக்கும் இந்தப் பிறப்பு ஒரே ஒரு தடவைதான். இது ஓர் அரிய சந்தர்ப்பம். அடுத்த பிறவி பற்றி ஆராயாமல், தற்போது வாழும் காலத்தில் செய்ய வேண்டிய, நல்ல கருமங்களைச் செய்வதே சிறப்பானதாகும்.

இருக்கும் காலத்தில் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதில் நேரிய தெளிவும் உழைப்பும் அவசியமானது.

ஒவ்வொரு பொழுதுகளும் கடந்த வண்ணமிருக்கின்றது. எனவே போன பொழுது மீண்டும் எழுவதில்லை. அவதானமாக அறிவுடன் இயங்குவதே ஆக்கப்பூர்வமானதாகும்.

நாளைக்கு எனச் சொல்வதை நிறுத்துங்கள். ஆனால், எல்லா வேலைகளையும் ஒரே நாளில் செய்ய முடியாது. செய்யும் கருமங்களை அட்டவணைப்படுத்துக!

முறைப்படி கருமம் ஆற்றுவதற்கு, அவை பற்றிய அறிதலுடன், தெரியாதவற்றைக் கேட்டு உணர்ந்து செய்தால், காரிய சித்தி உண்டாகும்.

சில தடவைகள் எதிர்பாராத துன்பங்கள் நடப்பதும் இயற்கை. ஆனால், அதற்குள் தொடர்ந்து சுழலாமல், இயங்கியே ஆகவேண்டும்.

நமக்கும் குடும்பத்துக்கும் சேமிப்பு அவசியம் தேவை. உலகுக்கான சேவையை மறக்காதீர்கள்!

–பருத்தியூர் பாலவயிரவநாதன்

### அரசாங்கம் கனவு கண்டது போல்
# அமையவில்லை

மொஹமட் பாதுஷா

ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களில் மக்கள் வெளிப்படுத்திய நிலைப்பாட்டை விட சற்று மாறுபட்டதொரு எண்ணப்பாட்டை உள்ளூராட்சி சபை தேர்தல் ஊடாக மக்கள் உட்கிடையாக வெளிப்படுத்தி இருப்பதாகத் தெரிகின்றது.

அந்த வகையில். தமிழ், முஸ்லிம்,மலையகக் கட்சிகளுக்கும் கொழும்பில் அரசியல் செய்யும் சிறுபான்மை அணிகளுக்கும் மட்டுமன்றி; தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட பெருந்தேசியக் கட்சிகளும் ‘தேர்தல் முடிவுகள்’ என்ற இந்தப் புள்ளி விபரங்களை ஆராய்ந்தறிந்து சில பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

முதலாவது விடயம், நாடுபூராகவும் அரைவாசிக்கு அதிகமான சபைகளில் எந்தவொரு கட்சியாலும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆளுக்காள் வசைபாடி, மக்களைக் கூட்டம் கூட்டமாகப் பிரித்து அரசியல் செய்தவர்கள் இப்போது இணைந்து ஆட்சியமைப்பதாக, ‘டீல்’ பேசத் தொடங்கியுள்ளார்.

எதிரணியையும் அதன் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக வரவுள்ளவர்களையும் ‘கள்வர்கள்’ என்று கூறிய என்.பி.பி. கட்சி, யாருடனும் இணைந்து ஆட்சியமைக்க மாட்டோம் என்று கூறி வந்தது. இப்போது அவற்றில் உள்ள நல்லவர்கள், முற்போக்கானவர்களை இணைப்பது பற்றிச் சிந்திக்கின்றது.

மறுபுறத்தில், ஆளும் கட்சியை ‘பொய்யர்கள்’ என்று இன்று வரை கூறி வருகின்ற எதிரணிக் கட்சிகள் பல இடங்களில் வாய்ப்புக் கிடைத்தால் இணைந்து செயற்படத் தயங்காது என்பதே யதார்த்தமாகும். பாவம், வழக்கம்போல அரசியல் அணிகளின் பிரித்தாளும் அரசியலால் ஏமாந்தது அப்பாவி மக்கள்தான்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் அரசாங்கம் கனவு கண்டது மாதிரி அமையவில்லை. ‘நாங்கள்தான் முஸ்லிம் கட்சி,’ ‘நாங்கள்தான் தமிழ்க் கட்சி’ என்று என்.பி.பி. கூறி வந்தாலும், வடக்கு கிழக்கில் கணிசமான மக்கள் உள்ளூராட்சி மன்றங்களில் உண்மையான தனித்துவ முஸ்லிம், தமிழ்க் கட்சிகளுக்கே முன்னுரிமை வழங்கியிருக்கின்றார்கள்.

இந்த தேர்தலில் வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற தனித்துவ அடையாள முஸ்லிம் கட்சிகளுக்கே கணிசமான வாக்குகளை அளித்திருக்கின்றார்கள்.

அதேபோல், தமிழ்ப் பிரதேசங்களில் தமிழரசுக் கட்சி அநேக சபைகளைக் கைப்பற்றியுள்ளது. ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணி, அ.இ.தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் போன்ற கட்சிகளும் சில சபைகளில் அதிக உறுப்பினர்களைப் பெற்றுள்ளன.

மலையகத்தைப் பொறுத்தமட்டில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி இரு சபைகளைத் தனதாக்கியுள்ளது. இதுதவிர, ஒரு சில தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் சுயேச்சையாகப் போட்டியிட்ட குழுக்களும் கொடி நாட்டியுள்ளன.

ஆகவே, இந்த மக்கள் ஒரு செய்தியைச் சொல்லியுள்ளார்கள். அதாவது, அனுரகுமார நாட்டின் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் அதில் மாற்றமில்லை. பாராளுமன்றத் தேர்தலிலும் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெறச் செய்தோம். அதிலும் தயக்கமில்லை.

ஆனால், இது உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல். சிறுபான்மைப் பிரதேசங்களைப் பெரும்பான்மைக் கட்சிகள் ஆள்வதை விட, எம்மை நாமே, நமது கட்சிகளே ஆள்வதே ஒப்பீட்டளவில் சிறந்தது என்று இப்போது நாங்கள் நினைக்கின்றோம் என்று மறைமுகமாகக் கூறியுள்ளார்கள்.

உண்மையில், இதற்கு முந்திய உள்ளூராட்சி சபைகளில் ஜே.வி.வி. அல்லது என்.பி.பியின் செல்வாக்கு 5 சதவீதம் அளவிலேயே இருந்தது. இப்போது கிட்டத்தட்ட 40 சதவீதமாகியுள்ளது. குறிப்பாக வடக்கு, கிழக்கில் சபைகளை என்.பி.பியினால் வெற்றி கொள்ள முடியாது போனாலும் பெரும்பாலான சபைகளில் அக்கட்சியின் பல உறுப்பினர்கள் (முதன்முதலாக) தெரிவாகியுள்ளனர்.

சிறுபான்மை மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களிலாவது தங்களது முஸ்லிம், தமிழ் கட்சிகளுக்கு அதிகாரத்தைக் கொடுத்து அழகு பார்க்காமல், தம்மைத் தாமே ஆளும் ஒரு அதிகார மையத்தை உருவாக்காமல், உள்ளூராட்சி சபை தேர்தல்களிலும் முஸ்லிம், தமிழ் மக்கள் பெரும்பான்மைக் கட்சிக்கு ஆணை வழங்குவார்கள் என்று நம்ப முடியாது.

ஆனால் ஒன்று, உள்ளூராட்சித் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இது ஆளும் கட்சிக்குத் தோல்வி இல்லை என்றாலும், பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற ஆறு மாதங்களுக்குள் நாடுபூராகவும் உள்ள மூவினங்களையும் சேர்ந்த இத்தனை இலட்சம் மக்கள் என்.பி.பி. விட வேறு ஒரு கட்சிக்கு முன்னுரிமை வழங்கியதற்கான காரணம் என்ன என்பதை அரசாங்கம் ஆராயவே வேண்டும்.

தமக்குரிய சொந்த அரசியல் அணிகள் மீண்டெழுவதற்கான ஒரு வாய்ப்பை வடக்கு, கிழக்கில் சிறுபான்மைச் சமூகங்கள் வழங்கியிருக்கின்றன, அவை ஆளும் தரப்பின் வாக்கில் குறைவை ஏற்படுத்தியிருக்கின்றது என்று வைத்துக் கொண்டாலும், அதற்கும் அப்பால் நாடுபூராகவும் 23 இலட்சம் வாக்குகள் எப்படிக் குறைந்தன என்பதற்கான காரணங்கள் அவ்வளவு இரகசியமானவை அல்ல.

மூவின மக்களினதும் நம்பிக்கை நட்சத்திரமாக அனுரகுமார இருந்தார், இன்னும் இருக்கின்றார். ஜனாதிபதிக்காகவே என்.பி.பிக்கு நாட்டு மக்கள் திரண்டு வாக்களித்தனர். ஆனால், கடந்த ஐந்தாறு மாதங்களில் ஒரு சில முற்போக்கான நகர்வுகளை அரசாங்கம் செய்திருந்தாலும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற போது. ஆளும் கட்சி சொன்னவற்றை எல்லாம் செயலில் காட்டவில்லை.

முஸ்லிம் ஒருவருக்கு அமைச்சு கொடுக்காமல் அதற்கு கடுந்தொனியில் வியாக்கியானம் கொடுத்தது முதற்கொண்டு, குரங்குக் கதைகள், சிறுபிள்ளைத்தனமான அறிக்கைகள் தொட்டு, கொழும்பில் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட மாணவி விடயத்தில் நடந்து கொண்டது வரை, பல விடயங்களில் அரசாங்கம் மக்கள் மத்தியில் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

நாட்டை வினைத் திறனாகவும், ஏற்கனவே ஜே.வி.பியும் என்.பி.பியும் வாக்குறுதி அளித்ததன் படியும் முன்கொண்டு செல்ல முடியாமல் போனது ஒருபுறமிருக்க, அமைச்சர்கள் மற்றும் என்.பி.பி. எம்.பிக்களின் செயற்பாடுகளும் எதிர்வினை அறியாத அறிக்கைகளும், ‘படித்தவர்களின் அரசாங்கம்’ என்ற அடைமொழியை கேலிக்குள்ளாக்கியுள்ளது

இப்படிப் பல விடயங்கள் இவ்வாறு வாக்குகள் குறைந்ததற்குக் காரணமாக அமைந்தன எனலாம். அதாவது பாராளுமன்ற தேர்தல் காலத்தில் மக்கள் மனங்களில் எந்த இடத்தில் என்.பி.பியை வைத்திருந்தார்களோ, அந்த இடத்தில் தொடர்ந்தும் வைத்திருக்க முடியுமா என்று மக்கள் மீளச் சிந்திக்கின்றார்கள் என்றும், இந்த தேர்தல் முடிவுகளைக் கருத முடியும்.

இதனையெல்லாம் மீறி அரசாங்கம் எதிர்பார்த்தது போல 68 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் கிடைக்க வேண்டுமென்றால், அதற்காக 159 பேரும் கடுமையாக உழைத்திருக்க வேண்டும். ‘பொய்க் கதைகள்’ கூறுகின்றார்கள் என்று விமர்சனங்கள் எழுமளவுக்கு நிலைமைகள் கேலிக்கூத்தாகச் செல்வதற்கு இடமளித்திருக்கக் கூடாது.

குறிப்பாக, சிறுபான்மைச் சமூகங்கள் தமக்கே வாக்களித்தார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. உண்மையான நல்லெண்ணத்தை அரசாங்கம் வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆளும் தரப்பின் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது கட்சி சொல்வதை மட்டுமே செய்யாமல், தங்களது சமூகத்தின் குரல்களுக்கும் செவிசாய்த்திருக்க வேண்டும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் உள்ள என்.பி.பி.யின் தமிழ் எம்.பிக்கள் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் றிசாட் புகாரி என்பவருக்குத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவி கிடைக்கலாம் என்று மக்கள் எண்ணிக் கொண்டிருந்த சமயத்தில் அப் பதவியைப் பெற்றுக் கொண்ட ஆதம்பாவா எம்.பி. போன்றோர், இன்னும் தீயாக அடிமட்ட மக்களுக்குள் இறங்கி வேலை செய்திருக்க வேண்டும்.

ஆனால், அப்படியான அபூர்வங்கள் எதுவும் நடக்கவில்லை. மாறாக ஆளும் தரப்பின் எம்.பிக்கள் மட்டுமன்றி, சில உள்ளூர் செயற்பாட்டாளர்களும் அதிமேதாவித்தன வேலைகளைப் பார்த்து, இருந்த வாக்குகளையும் கெடுத்துக் கொண்டார்கள்.

இதுவெல்லாம் நடக்காமல், அரசாங்கம் பொருளாதார, சமூக ரீதியாக விடயங்களைச் சாதித்துக் காட்டியிருந்தால், என்.பி.பி. எம்.பிகள் தாங்கள் உண்மையிலேயே புத்திசாலிகள், திறமைசாலிகள், சேவை செய்யக் கூடியவர்கள் என்பதை மக்கள் மன்றத்தில் நிரூபித்து காட்டியிருந்தால், உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் வேறுமாதிரி அமைந்திருக்கலாம்.

பொதுவாக, நாட்டு மக்கள் என்ற அடிப்படையிலும், குறிப்பாக, தமிழர்கள், முஸ்லிம்கள் விடயத்திலும் எங்குத் தவறு நடந்துள்ளது என்பதை, எல்லா விடயங்களையும் ஆராய்ந்தறியும் ஆற்றல் பெற்ற அரச மேலிடம் விளங்கிக் கொள்ள வேண்டும். உள்ளுக்குள் பல மாற்றங்களைச் செய்தால் எதிர்காலத்தில் இந்த நிலைமைகளை மாற்றியமைக்கலாம்.

மறுபுறத்தில், சிறுபான்மைக் கட்சிகள் இந்த தேர்தல் முடிவுகளை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கடந்த தேர்தலில் பல முஸ்லிம், தமிழ் அரசியல்வாதிகளைத் தோற்கடித்து சிறுபான்மைக் கட்சிகளுக்கு பாடம் புகட்டிய முஸ்லிம்களும் தமிழர்களும், உள்ளூராட்சி மன்றங்களில் தமது சொந்த அரசியல் கட்சிகளுக்கு முன்னுரிமை வழங்கியிருக்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முஸ்லிம் பிரதேசங்களில் முஸ்லிம் கட்சிகளும், தமிழப் பிரதேசங்களில் தமிழ்க் கட்சிகளுக்கும் வெற்றியை மக்கள் வழங்கியிருப்பது ஒரு செய்தியாகும். தமக்கான சொந்த அரசியல் தேவை என்ற அவர்களது உணர்வை இது வெளிப்படுத்துகின்றது.

இதனைப் புரிந்து கொண்டு, தமக்கான அரசியலை அடிமட்டத்தில் இருந்து மீளக் கட்டியெழுப்ப குறிப்பாக முஸ்லிம் கட்சிகளும் தலைவர்களும் நடவடிக்கை எடுத்தால், எதிர்காலத்தில் விமோசனம் உண்டு.

## கடிதங்கள்

### வீதியின் அவல நிலை


மன்னார், தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைந்துள்ள பொது போக்குவரத்து வீதியில் பல கோடி ரூபாய் பெறுமதியான பேருந்துகள் உரிய பராமரிப்பின்றி நிறுத்தப்பட்டுள்ளதாக மன்னார் போக்குவரத்து வீதி தரப்பினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மன்னார் மாவட்டத்தில் இருந்து பல தூரப் பகுதிகளுக்கான சேவை நீண்ட காலங்களாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது கொழும்பு, கண்டி, போன்ற தூரப் பகுதிகளுக்கு மிகவும் பழுதடைந்த பேருந்துகளை மன்னார் போக்குவரத்து வீதி பயன்படுத்தி வருகின்றமை சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த பேருந்துகளின் நிலை தொடர்பிலும், நிர்வாக சீர்கேடுகள் தொடர்பிலும், பல வருடங்கள் முறைப்பாடுகள் செய்தும் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் கடந்த இரண்டு வருடங்கள் எந்த ஒரு உயர் அதிகாரிகளும் மன்னார் போக்குவரத்து வீதிக்கு விஜயம் மேற்கொண்டு மக்கள் முறைப்பாடுகள் தொடர்பாகவோ பேருந்து வீதியின் நிலை தொடர்பாகப் பார்வையிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

- எஸ்.ஆர்.லெம்பேட்







டாக்டர் ஷாபியின்


# ‘அநீதிக்கு எதிரான போராட்டம்’ நூல் வெளியீடு

சிரேஷ்ட ஊடகவியலாளரும் பன்னூலாசிரியருமான அஷ்ரஃப் சிஹாப்தீன் எழுதிய ‘டாக்டர் ஷாபியின் அநீதிக்கு எதிரான போராட்டம்’ என்ற நூல் வெளியீடு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப தொகுதியில் உள்ள ‘ஜெஸ்மின்’ அரங்கில் வெள்ளிக் கிழமை (09) பி.ப. 4.00 மணிக்கு நடைபெற்றது. அப்றார் பவுண்டேஷன் நிறுவனத் தலைவர் டாக்டர் ரயீஸ் முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மேல்மாகாண ஆளுநர் ஹனீப் யூஸுப், கலந்து கொண்டார். சிரேஷ்ட சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

நூல் பற்றிய கருத்துரையை ஆசிரியையும் இலங்கை திறந்த பல்கலைக் கழக வருகை தரு விரிவுரையாளருமான சுமையா ஷரீப்தீன் வழங்கினார். ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியான ஏ.எல்.ஏ.அஸீஸ் ‘நூல் கடந்த நோக்கு’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

பதிலுரைகளை டாக்டர் ஷாபி சிஹாப்தீன், நூலாசிரியர் அஷ்ரஃப் சிஹாப்தீன் ஆகியோர் நிகழ்த்தினர். வரவேற்புரையைச் செல்வி ஸெய்னப் ஷாபி நிகழ்த்தினார். நிகழ்ச்சிகளைத் ஆஷிகா பர்ஸான் தொகுத்து வழங்கினார்.











# கொழும்பில் 10 வெசாக் தோரணங்கள்

பக்தியுடன் கொண்டாடப்படும் வெசாக் போயாவைக் குறிக்கும் வகையில், கொழும்பு நகரில் சுமார் பத்து கண்கவர் வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பேலியகொடையில் உள்ள நவலோக்க, தொட்டலங்க, பலாமர சந்தி (கொஸ்கஸ் சந்தி), பொரள்ளை, தெமட்டகொடையில் உள்ள கேம்பல் பீல்ட் அருகே, பௌத்தாலோக மாவத்தையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்திற்கு அருகில், புறக்கோட்டையில் உள்ள போதி மரத்திற்கு அருகில், ஹுணுபிட்டியவில் உள்ள கங்காராமய விஹாரையில், கொழும்பு 02, ப்ரேப்ரூக் பிளேஸில் உள்ள சிரச தலைமையகத்தில் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, கொழும்பு நகரில் பல வெசாக் வலயங்கள் உள்ளன.


ஹுணுபிட்டிய கங்காராமய விகாரையில் உள்ள புத்த ரஷ்மி வெசாக் வலயம், பௌத்த மகா சம்மேளனத்தில் உள்ள பௌத்தாலோக மாவத்தை வெசாக் வலயம் மற்றும் ப்ரேபுரூக் பிளேஸில் உள்ள சிரச வெசாக் வலயம் ஆகியவை அந்த வெசாக் வலயங்களில் அடங்கும். வெசாக் போயா தினத்தையொட்டி, நாடு முழுவதும் பல கண்கவர் வெசாக் பந்தல்கள் மற்றும் வெசாக் வலயங்கள் உள்ளன.













புதுடெல்லி



## நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய 10 செயற்கைக்கோள்கள்

# 24 மணி நேரமும் கண்காணிப்பு

### இஸ்ரோ தலைவர் வி.நாராயணன்

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான மோதல் சற்று தணிந்திருக்கும் நிலையில், நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய 10 செயற்கைக்கோள்கள் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருவதாக இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீரில் ஏப்ரல் 22ஆம் திகதி நடந்த பாகிஸ்தானின் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு, பதிலடியாக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை மேற்கொண்டது. அதன் பிறகு பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைக்கு பின்னர், இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்தம் தொடர்பாக கடந்த 10ஆம் திகதி மாலை ஓர் உடன்பாடு எட்டப்பட்டது. தற்போது 19 நாட்கள் பதற்றத்துக்குப் பின் எல்லையில் மோதல்கள் அற்ற இரவு நீடித்ததாகவும், அமைதி திரும்பியுள்ளதாகவும் இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை 11ஆம் திகதியன்று இம்பாலில் உள்ள மத்திய வேளாண் பல்கலைக்கழகத்தின் 5ஆவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய இஸ்ரோ தலைவர் வி. நாராயணன், “நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய 10 செயற்கைக்கோள்கள் 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

நமது அண்டை நாடுகளைப் பற்றி நீங்கள் அனைவரும் அறிவீர்கள். நமது அண்டை நாடுகளின் நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டியது அவசியம். நமது நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென்றால், செயற்கைக்கோள்கள் மூலமாகவே நாம் கண்காணிக்க வேண்டும்.

தற்போது, நமது நாட்டின் 7,000 கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள கடல் எல்லையை செயற்கைக்கோள் வழியாகவே கண்காணித்து வருகிறோம். நமது செயற்கைக்கோள் மற்றும் ட்ரோன் தொழில்நுட்பம் இல்லாவிட்டால், பல்வேறு சாதனைகளை நாம் நிகழ்த்தியிருக்க முடியாது” என்று தெரிவித்துள்ளார்.

இந்தியா

## விமான நிலையங்கள்

# விரைவில் திறப்பு



விமான நிலையங்களைத் திறப்பது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.


போர் பதற்றக் காரணமாக, இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் உள்ள 32 விமான நிலையங்களில் விமானச் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடந்த மோதல் தற்போது முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, மூடப்பட்ட 32 விமான நிலையங்களை மீண்டும் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மூடப்பட்ட விமான நிலையங்களில் செயல்பாடுகள் மீண்டும் தொடங்குவது குறித்த முறையான அறிவிப்பு விரைவில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜம்மு-காஷ்மீர்

# எல்லையில் அமைதி



ஜம்மு-காஷ்மீரில் இரு நாட்டு எல்லைப் பகுதிகளில், ஞாயிற்றுக்கிழமை (11) இரவு அமைதியான சூழல் நிலவியதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவம் ஞாயிற்றுக்கிழமை(11) இரவு எந்த விதமான தாக்குதல்களையும் நடத்தவில்லை என்றும், ஞாயிற்றுக்கிழமை(11) அமைதியான இரவாக இருந்ததாக இந்திய இராணுவம் வெளியிட்ட சுருக்கமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்கா

## கொங்கோவில் வெள்ளம்:

# 100 பேர் பலி; 50 பேர் மாயம்



மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயக குடியரசில் ஏற்பட்ட வெள்ளத்தில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கு மாகாணமான கிவுவில் வியாழக்கிழமை(8) இரவு முதல் வெள்ளிக்கிழமை(9) வரை மழை பெய்தது.

இதன் காரணமாக, நங்கன்ஜா நகரில் உள்ள டாங்கன்யிகா உட்பட பல ஏரிகள் நிரம்பின. தொடர்ந்து பெய்த கனமழையால் அந்த ஏரியின் கரை உடைந்து தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் ஏரிக்கரையோரம் அமைந்துள்ள கசாபா கிராமத்தை வெள்ளம் அடித்துச் சென்றது. இதில் அங்கிருந்த பல வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. இந்த கட்டிட இடிபாடு மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி பலர் அடித்துச் செல்லப்பட்டனர். இதனையடுத்து, மீட்பு பணி துரிதப்படுத்தப்பட்டது. இதில் மீட்புப் படையினருக்கு உதவியாக உள்ளூர் மக்களும் இணைந்தனர். அவர்கள் படகுகள் மூலம் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றினர்.

எனினும் இதுவரை நடைபெற்ற மீட்புப் பணியில் பலர் சடலமாக மீட்கப்பட்டு உள்ளனர். மேலும் 50 பேர் மாயமானதாக கூறப்படுகிறது. அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்ற வருகிறது.

இதற்கிடையே வெள்ளப்பெருக்கால் மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. இதனால் மீட்பு பணியில் தொய்வு ஏற்பட்டது.

இந்த நிலையில் இறந்தவர்களில் பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் எனவும் இதில் 28 பேர் காயமடைந்தனர் எனவும் தெரியவந்துள்ளது.

சுமார் 150 வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் பிராந்திய நிர்வாகி ஒருவர் கூறினார்.

இதனையடுத்து, பிராந்திய நிர்வாகி சம்மி கலோஞ்சி கூறுகையில், இந்த வெள்ளப்பெருக்கு குறைந்தது 104 பேர் உயிரிழந்திருக்கக் கூடும் என்றும் கூறினார்.

# விராட் கோலி ஓய்வு



இந்தியாவின் கிரிக்கெட் ஜாம்பவான் விராட் கோலி இன்று திங்கட்கிழமை டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

36 வயதான கோலி இந்தியாவுக்காக 123 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 30 சதங்களுடன் 46.85 சராசரியுடன் 9,230 ரன்கள் குவித்துள்ளார். கடந்த ஆண்டு டி20 சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற அவர் இப்போது ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாடுவார்.

“இந்த வடிவத்திலிருந்து நான் விலகுவது எளிதானது அல்ல. ஆனால், அது சரியான முடிவாக உணர்கிறது. நான் அதற்காக என்னிடம் இருந்த அனைத்தையும் அர்ப்பணித்துள்ளேன். மேலும் நான் எதிர்பார்த்ததை விட இது எனக்கு மிக அதிகமாகவே திருப்பித் தந்துள்ளது” என்று கோஹ்லி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அறிவித்தார்.

“விளையாட்டுக்காகவும், நான் மைதானத்தைப் பகிர்ந்து கொண்ட மக்களுக்காகவும், என்னைப் முழுமையாக ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு நபருக்காகவும் நான் நன்றியுணர்வு நிறைந்த இதயத்துடன் புறப்படுகிறேன்” என்று அவர் மேலும் கூறினார்.

ரவிச்சந்திரன் அஸ்வின் (டிசெம்பரில்) மற்றும் ரோஹித் சர்மா (கடந்த வாரம்) ஆகியோர் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றதையடுத்து, விராட்டின் ஓய்வு இந்திய அணியின் முன்னணி வீரர்கள் டெஸ்ட் போட்டிகளில் இருந்து வெளியேறுவதைத் காட்டுகிறது.

## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# நியூகாசிலிடம் தோற்ற செல்சி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(11) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது.

நியூகாசில் சார்பாக சன்ட்ரோ டொனாலி, ப்ரூனோ குய்மரஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, சம்பியனாகியுள்ள லிவர்பூலின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது. ஆர்சனல் சார்பாக கப்ரியல் மார்டினெல்லி, மிகேல் மெரினோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். லிவர்பூல் சார்பாக கோடி கக்போ, லூயிஸ் டியஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற கிறிஸ்டல் பலஸுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது.

இந்நிலையில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 83 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் சம்பியனாகியுள்ள லிவர்பூல் காணப்படுகின்றது. 68 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் ஆர்சனலும், 66 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நியூகாசிலும், 65 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் மன்செஸ்டர் சிற்றி காணப்படுகின்றது.



## ஐ.பி.எல். மீள ஆரம்பித்தால்

# ஹேசில்வூட்டின் மீள்வருகை சந்தேகம்

இந்தியன் பிறீமியர் லீக்கானது (ஐ.பி.எல்.) மீள ஆரம்பித்தால் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவின் ஜொஷ் ஹேசில்வூட் திரும்புவாரா என்பது சந்தேகத்துக்குரியதாகக் காணப்படுகிறது.

தோட்பட்டை உபாதை காரணமக பெங்களூரின் சென்னை சுப்பர் கிங்ஸுக்கெதிரான மே மாதம் மூன்றாம் திகதி நடைபெற்ற போட்டியில் ஹேசில்வூட் பங்கேற்றிருக்கவில்லை.

# தேறி வருகிறார் பட்டிடார்

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்.) றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவின் அணித்தலைவர் ரஜாட் பட்டிடார் தற்போது விரல் காயமொன்றிலிருந்து குணமடைந்து வருகின்றார். இந்தியா, பாகிஸ்தானுக்கிடையேயான எல்லை தாண்டிய பதற்றங்கள் காரணமாக ஐ.பி.எல் தற்காலிகமாக இடைநிறுத்தப்படாவிட்டால் குறைந்தது இரண்டு போட்டிகளையாவது பட்டிடார் தவறவிட்டிருப்பார். சென்னை சுப்பர் கிங்ஸுக்கெதிரான இம்மாதம் 3ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் காயமடைந்த பட்டிடாருக்கு விரலில் பாதுகாப்புக் கவசத்தை அணிந்து மீண்டும் காயத்தை பார்வையிடும் வரையில் 10 நாள்களுக்கு பயிற்சியில் ஈடுபட வேண்டாமென அறிவுறுத்தப்பட்டிருந்தது.

பட்டிடார் இல்லாத நிலையில் ஜிதேஷ் ஷர்மா பெங்களூருவுக்கு தலைமை தாங்குவதாக இருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 13, மே 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.